சிவஸ்ரீ

# தேவார முதலிகளால் பாடல் பெற்ற திருக்கேதீச்சரப் பதிகங்களும் திருக்கோணேச்சரப் பதிகமும்.

## திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்
## சுந்தரமூர்த்தி நாயனார்
அவர்களால் பாடப்பட்டவை

வவுனியா மணிவாசகர் சபையினரால் நடத்தப்படும்
12 ஆம் ஆண்டு விழாவுக்கான
மனனப் போட்டிக்குரிய தொகுதி.
(முப்பத்தொரு பாடல்கள்)

வெளியீடு:
மணிவாசகர் சபை, வவுனியா,
2013.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சர நாதன் ஆலயத்தினதும் திருக்கோணேச்சர நாதன் ஆலயத்தினதும்

# தேவாரத் திருப்பதிகங்கள்

இலங்கையின் வன்னி மாவட்டங்களுள் மன்னார் மாவட்டமும், திருகோணமலை மாவட்டமும் உள்ளடங்கியிருந்தன என்பதற்குச் சான்றா தாரங்களுண்டு. மன்னார் மாவாட்டத்தில் அருள் பாலித்த வண்ணம் அமைந்து திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாராலும், சுந்தரமூர்த்தி நாயனாராலும் பாடல் பெற்ற விசேடதலமாக விளங்குகின்ற திருக்கேதீச்சர நாதனின் பதிகங்கள் இரண்டும், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் அருட்பாடல் பெற்று விளங்கும் திருக் கோணேச்சரப் பதிகமும் கொண்ட தொகுப்பாக, வவுனியா மணிவாசகர் சபை இந்நூலை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றது.

வவுனியா மணிவாசகர் சபை வருடாவருடம் பஞ்சபுராணம் ஓதும் போட்டி, திருவாசகம் ஓதும் போட்டி போன்வற்றுடன் பஞ்சபுராணங்களை எழுத்துப் பிழையற எழுதுதல், மணிவாசகப் பெருமானின் வரலாற்றை எழுத்துப் பிழையில்லாமலும், சரியான உச்சரிப்புடன் வாசித்தல், மணிவாசகப் பெருமானின் வாரலாற்றிலுள்ள அற்புதங்களை வெளிப்படுத்திப் பேசுதல், திருவாசகக் கும்மி, கோலாட்டம், நடனம், நாடகம் போன்ற பல்வேறு பரிமாணங்களில் இந்து அறநெறிப் பாடசாலைகளுக்கிடையே போட்டிகளை நடத்தி மாணவர்களின் திறன் விருத்திக்காக அருமுயற்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துவருகின்றது என்பதை மகிழ்வுடன் தெரிவிக்கின்றது. பூமாலை கட்டுதல், மாக்கோலம் போடுதல் போன்ற நுண் அறிவுத் திறன் விருத்திக்கும் போட்டிகளை நடத்தியுள்ளது என்பதும், அறநெறிப் பாடசாலை மாணவர்கள் துலங்குவதற்காக சகல விதமான களங்களையும் ஏற்படுத்தியுள்ளது என்பதும், யாவரும் அறிந்த விடயம் என்பதோடல்லாமல், வெற்றியீட்டிய அறநெறிப் பாடசாலை மாணவ, மாணவியர்களுக்கு சான்றிதழ்களும், வெள்ளிப் பதக்கங்களும் சபையின் தலைவர் திருவாசகச் செல்வர் வை. செ. தேவராசா அவர்களினால் காலத்தக்குக் காலம் வழங்கப்பட்டு மாணவர்களை ஊக்குவித்தல் பாராட்டப்பட வேண்டியதொன்று.

மணிவாசகச் சபையின் பன்னிரண்டாண்டு நிறைவின் மங்கல விழா 2014 ஆம் ஆண்டு தைத்திங்கள் பூச நட்சத்திரத் தினத்தன்று நடை பெறுமெனத் தீர்மாணிக்கப்பட்டுள்ளது. விழாவுக்கான போட்டிக்கான கலைத் திட்டப்பகுதியாக (பாடமாக்க வேண்டிய பகுதி) இப்பதிகத் தொகுப்பை வழங்குவதில் மணிவாசகர் சபை மனநிறை வெய்துகின்றது.

இவ்வாண்டு நடைபெறவுள்ள மங்கல விழாவில் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் மட்டுமல்லாது பாடசாலை மாணவர்களும் பங்குபற்றி வெற்றி பெறச் சந்தர்ப்பம் கொடுப்பதில் சபை மகிழ்வடைகின்றது.

நன்றி.

**மணிவாசகர் சபை**
**வவுனியா.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சரம்

(திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த
தேவாரப்பதிகம் 2 ஆம் திருமுறை)

சுவாமி: கேதீச்சரர் தேவி: கௌரியம்மை

பண்: நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

01. விருது குன்றமா மேருவி னாணர
வாவன லெரியம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்
றுறைபதி யெந்நாளுங்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டங்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினை யடையாவே.

02. பாடல் வீணையர் பலபல சரிதைய
ரெருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவ ரமரர்கள் வேண்டநஞ்
சுண்டிருள் கண்டத்தர்
ஈட மாவது இருங்கடற் கரையினி
லெழிறிகழ் மாதோட்டங்
கேடி லாதகே தீச்சரந் தொழுதெழக்
கெடுமிடர் வினைதானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. பெண்ணோர் பாகத்தர் பிறைதவழ் சடையின
ரறைகழல் சிலம்பார்க்கச்
சுண்ண மாதிரித் தாடுவர் பாடுவ
ரகந்தொறு மிடுபிச்சைக்
குண்ண லாவதோ ரிச்சையி னுழல்பவ
ருயர்தரு மாதோட்டத்
தண்ண னண்ணுகே தீச்சர மடைபவர்க்
கருவினை யடையாவே

04. பொடிகொண் மேனியர் புலியத ளரையினர்
விரிதரு கரத்தேந்தும்
வடிகொண் மூவிலை வேலினர் நூலினர்
மறிகடன் மாதோட்டத்
தடிக ளாதரித் திருந்தகே தீச்சரம்
பரிந்த சிந்தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல்லார் தம்மேன்
மொய்த்தெழும் வினைபோமே.

05 நல்ல பூாற்றவு ஞானநன் குடையர்தம்
மடைந்தவர்க் கருளீய
வல்லர் பார்மிசை வான்பிறப் பிறப்பிலர்
மலிகடன் மாதோட்டத்
தெல்லை யில்புக ழெந்தை கேதீச்சர
மிராப்பகல் நினைந்தேத்தி
அல்ல லாசறுத் தரனடி யிணைதொழு
மன்பரா மடியாரே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. பேழை வார்சடைப் பெருந்திரு மகள்தனைப்
பொருந்தவைத் தொருபாகம்
மாழை யங்கயற் கண்ணிபா லருளிய
பொருளினர் குடிவாழ்க்கை
வாழை யம்பொழின் மந்திகள் களிப்புற
மருவிய மாதோட்டங்
கேழல் வெண்மருப் பணிந்தநீண் மார்பர்
கேதீச்சரம் பிரியாரே.

07. பண்டு நால்வருக் கறமுரைத தருளிப்பல்
லுலகினி லுயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக்
காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழின்மஞ்ஞை
நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறுந் துதிசெய அருள்செய்
கேதீச்சர மதுதானே.

08. தென்னி லங்கையர் குலபதி மலைநலிந்
தெடுத்தவன் முடிதிண்தோள்
தன்ன லங்கெட அடர்த்தவற் கருள்செய்த
தலைவனார் கடல்வாயப்
பொன்னி லங்கிய முத்துமா மணிகளும்
பொருந்திய மாதோட்டந்
துன்னி யன்பொடு மடியவ ரிறைஞ்சு
கேதீச்சரத் துள்ளாரே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. பூவு ளானுமப் பொருகடல் வண்ணனும்

புவியிடந் தெழுந்தோடி

மேவி நாடிநின் அடியிணை காண்கிலா

வித்தக மென்னாகும்

மாவும் பூகமும் கதலியு நெருங்கு

மாதோட்டநன் நகர்மன்னித்

தேவி தன்னொடுந் திருந்து கேதீச்சரத்

திருந்தவெம் பெருமானே.

10. புத்த ராய்ச்சில புனைதுகி லுடையவர்

புறனுரைச் சமணாதர்

எத்த ராகிநின் றுண்பவ ரியம்பிய

ஏழைமை கேளேன்மின்

மத்த யானையை மறுகிட உரிசெய்து

போர்த்தவர் மாதோட்டந்

தத்தர் மன்னுபா லாவியின் கரையிற்

கேதீச்சர மடைமின்னே

11. மாடெ லாமண முரசெனக் கடலின

தொலிகவர் மாதோட்டத்

தாட லேறுடை யண்ணல் கேதீச்சரத்

தடிகளை யணிகாழி

நாடு ளார்க்கிறை ஞானசம் பந்தன்சொல்

நவின்றெழு பாமாலைப்

பாட லாயின பாடுமின் பத்தர்கள்

பரகதி பெறலாமே.

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சரம்
## (சுந்தரமுர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரப்பதிகம் 7ஆம் திருமுறை)

01. நத்தார் படை ஞானன் பசு ஏறிந்நனை கவிழ்வாய்
மத்தம் மத யானைஉரி போர்த்த மணவாளன்
பத்தா கிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேற்
செத்தார் எலும் பணிவான்திருக் கேதீச்சரத்தானே.

02. சுடுவார் பொடி நீறும் நல்ல துண்டப் பிறைக்கீளுங்
கடமார் களி யானைஉரி அணிந்த கறைக்கண்டன்
படவே ரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேற்
திடமா உறை கின்றான்திருக் கேதீச் சரத்தானே.

03. அங்கம் மொழி யன்னாரவர் அமரர் தொழுதேத்த
வங்கம் மலி கின்ற கடல் மாதோட்ட நன்னகரிற்
பங்கஞ் செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேற்
செங்கண் ணர வசைத்தான் திருக் கேதீச் சரத்தானே.

04. கரிய கறைக் கண்டன்நல்ல கண்மே லொருகண்ணான்
வரிய சிறை வண்டியாழ் செயும் மாதோட்ட நன்னகருள்
பரிய திரை எறியவரு பாலாவியின் கரைமேற்
தெரியும் மறை வல்லான் திருக் கேதீச் சரத்தானே.

05. அங்கத் துறு நோய்கள் அடி யார்மே லொழித்தருளி
வங்கம் மலி கின்ற கடல் மாதோட்ட நன்னகரிற்
பங்கஞ் செய்த மடவா ளொடு பாலாவியின் கரைமேற்
தெங்கம் பொழில் சூழ்ந்ததிருக் கேதீச் சரத்தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. வெய்ய வினை யாயஅடி யார்மே லொழித்தருளி
வையம் மலி கின்ற கடல் மாதோட்ட நன்னகரிற்
பையே ரிடை மடவா ளொடு பாலாவியின் கரைமேற்
செய்ய சடை முடியான் திருக் கேதீச் சரத்தானே.

07. ஊனத் துறு நோய்கள் அடி யார்மே லொழித்தருளி
வானத் துறு மலியுங் கடல் மாதோட்ட நன்னகரிற்
பானத் துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேற்
ஏனத் தெயி றணிந்தான் திருக் கேதீச் சரத்தானே.

08. அட்டன் அழ காகஅரை தன்மேல் அரவார்த்து
மட்டுண் டுவண் டாடும்பொழில் மாதோட்ட நன்னகரிற்
பட்ட வரி நுதலாளொடு பாலாவியின் கரைமேற்
சிட்டன் நமை ஆள்வான் திருக் கேதீச் சரத்தானே.

09. மூவ ரென இருவ ரென முக்கண் ணுடைமுர்த்தி
மாவின் கனி தூங்கும் பொழில் மாதோட்ட நன்னகரிற்
பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவியின் கரைமேற்
தேவன் எனை ஆள்வான் திருக் கேதீச் சரத்தானே.

10. கறையார் கடல் சூழ்ந்த கழி மாதோட்ட நன்னகருள்
சிறையார் பொழில் வண்டி யாழ் செயுங் கேதீச் சரத்தானை
மறையார் புகழ் ஊரன்அடித் தொண்டன் உரைசெய்த
குறையாத் தமிழ் பத்துஞ் சொலக் கூடா கொடுவினையே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேச்சரம்

## (திருஞான சம்பந்தமூர்த்தி நாயானார் அருளிச் செய்த தேவாராப் பதிகம் 3 ஆம் திருமுறை)

சுவாமி: கோணேச்சரர் தேவி: மாதுமையாள்

பண்: புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

01. நிரைகழல் அரவம் சிலம்பொலி அலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்கும்
கோணமா மலையமர்ந்தாரே.

02. கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமு னித்திலங்ஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றும்
கோணமா மலையமர்ந்தாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாக
மாகமுன் கலந்தவர் மதின்மேல்
தனித்தபே ருருவ விழித்தழ னாகந்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

04. பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் னரற்றுஞ் செழுங்கடற் றரளஞ்
செம்பொனு மிப்பியுஞ் சுமந்து
கொழித்தவன் திரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே.

05. தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வரும் கூற்றைத்
திரிந்திடா வண்ண முதைத்தவற் கருளுஞ்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே.

08. எடுத்தவன் தருக்கை யிழித்தவர் விரலால்
ஏத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோணமா மலையமர்ந் தாரே.

09. அருவரா தொருகை வெண்டலை யேந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையு நீர்மையர் சிர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரு மறியா வண்ணமொள் ளெரியா
யுயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. நின்றுணுஞ் சமணும் இருந்துணுந் தேரும்
நெறியலா தனபுறங் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசின ரொருபான்
மெல்லிய லொடுமுட னாகித்
துன்றுமொண் பௌவல் மௌவலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம்வந் துலவுங்
கோணமா மலையமர்ந் தாரே.

11. குற்ற மிலாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழார் மாலையீ ரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் யர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை உடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே.

திருச்சிற்றம்பலம்.

ஆறாம் பாடல் கிடைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசுர அன்பளிப்பு:

**வாணி கணனிப் பதிப்பகம்**

இல.75, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.
தொ.பே: 024 2223658, 024 2227216, 077 6316365
email: vaaniprinting@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org